தலைப்பு 307 - மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம்- 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு - 307 மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டு கொள்கைகள் தொடர்பான தகவல்கள் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன்கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2025 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 ஜுன் 27 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்கள் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆம் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆம் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின், பொது திறைசேரியின் மற்றும் பாராளுமன்றத்தின் தேவைப்பாட்டிற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின், பொதுத் திறைசேரியினதும்

பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள் செலவினங்கள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 (1) (இ) உபபிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணப்படுகிறது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக்காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரிள் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால்

இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்பத்தப்பட்டது.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரை

1.6.1 வருமானப் பெறுவனவு

திணைக்களத்திற்குரிய வருமானப் பெறுவனவுகளை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

	கணக்காய்வு அதவானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் மூலம் பொது மக்களிற்கு வழங்கும் சேவைக்காக ஒவ்வொறு வருமானக் குறியீட்டின் கீழ் நாளாந்தம் கிடைக்க வேண்டிய வருமானம் சரியாக திரட்டப்படுவதாக உறுதி செய்து கொள்ளாது மற்றும் வழங்கப்படும் சேவைகளின் பிரகாரம் கிடைக்க வேண்டிய வருமானம் மற்றும் கிடைத்த வருமானத்தை இணக்கம் செய்வதன் மூலம் ஆண்டின் வருமானம் சரியானதென உறுதி செய்துகொள்ளாது, வங்கியினால் நாளாந்தம் அனுப்பப்படும் வருமான அறிக்கை மற்றும் வங்கிக் கூற்றை மாத்திரம்	திணைக்களத்தில் செயற்படும் கணனித் தொகுதியின் நாளாந்த வருமான அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு வருடாந்த வருமானம் கணக்கீடு செய்யப்படுவதுடன் கணனித் தொகுதியின் சரியான தன்மையை பரீட்சிப்பதற்காக நாளாந்தம் வங்கியிலிடப்படும் தொகை மற்றும் கணனி நாளாந்த அறிக்கை ஒப்பீடு செய்யப்படுகின்றது. அவ்வாறே மாவட்ட அலுவலகங்களில் வங்கியிலிடப்படும் பணம் தொடர்பாக நாளாந்தம் WhatsApp குழுமத்தின் மூலம் தகவல்கள் பெறப்படுவதுடன், இந்த வருமானம் வங்கி கணக்கு கூற்று மற்றும் திறைசேரியினால மாதாந்தம் பொறுப்பேற்கும் காசுப் பாய்ச்சல்	திணைக்களத்தினால் வழங்கப்படுகின்ற சேவைகள் பிரகாரம் பெறவேண்டிய வருமானத்தையும் பெற்ற வருமானத்தையும் நாளாந்தம் இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டில் வருமானமாக ரூபா 12,974,594,203 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	தொடர்பான அறிக்கையுடன் ஒப்பிட்டு வருமானம் உறுதிப்படுத்தல் மேற்கொள்ளப்படுகின்றது.	
(ஆ)	மீளாய்வாண்டில் திணைக்கள 04 வருமானக் குறியீட்டின் கீழ் ரூபா 7,148,201 தொகை உரிய அங்கீகாரமின்றி வருமானத்திலிருந்து மீள் பெறப்பட்டிருந்ததுடன், அவற்றில் ரூபா 6,694,751 தொகை வருமானத்திலிருந்து மீள் செலுத்திதுவதற்கு காரணமாக அமைந்த விடயத்தை உறுதி செய்ய எழுத்துமூல சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	தபால் திணைக்களம் மற்றும் 12 மாவட்ட அலுவலங்களினால் அவ்வப் போது வருமானத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ளதுடன் அந்த வரவு வைப்பின் தவறை சரிசெய்வதற்காக 2020.08.28 திகதிய அரச நிதி சுற்றறிக்கை 1/2020-1 பகுதி 4 பந்தி நிதிப் பிரமாணம் 118 – திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்படும் அரச வருமானததை மீள் செலுத்துவது தொடர்பாக செயற்பட வேண்டிய முறை பற்றிய வழிகாட்டியின் நிதிப் பிரமாணம் 460 கீழ் இடப்பட்ட ஜர்னல் குறிப்பு காரணமாக ஏற்பட்டுள்ளது.	தவறை சீர்செய்தல் அல்லது வேறு கழித்தலிற்காக செய்துள்ள ஜர்னல் குறிப்பு, அதற்குரிய அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரின் அங்கீகாரம் மற்றும் பயன்பாட்டு பதிவேடுகள் அமைச்சு/திணைக்களம் /மாவட்ட செயலகங்களிலிருந்து பெற்று மாதாந்த கணக்கு பொழிப்புடன் ஒப்பீடு செய்ய வேண்டும்.
(இ)	திணைக்களத்தினால் பேணிச் செல்லும் நிலுவை வரி தொடர்பான அட்டவணை ஊடாக குறித்த மோடார் வண்டி பதிவு செய்த திகதி, எதிர் காலத்தில் செலுத்தவுள்ள வரி அளவு மற்றும் ஆண்டுகளின் எண்ணிக்கை, வரி நிலுவையாகவுள்ள ஆண்டுகளின் எண்ணிக்கை ஆகிய தகவல்கள் உள்ளடங்களாக ஒவ்வொரு வாகனம் பற்றிய நிலுவை வரி தொடர்பாக போதிய தகவல்களை பேணிச் செல்லாத காரணத்தினால் நிதிக்கூற்றுக்களில் உள்ள ரூபா 130,546,000 ஆன சொகுசு வரி வருமானத்தின் சரயான தன்மையை உறுதி செய்து கொள்ள முடியவில்லை.	1003-01-00 கொண்ட வருமானத் தலைப்பு சொகுசு மோடார் வாகன வரி ஆவதுடன், அதன் கீழ் சொகுசு, அரை சொகுசு, அரை சொகுசு இரட்டை பணி வரி திரட்டப்படுகிறது. அதற்காக வருடாந்தம் வருமான மதிப்பீடு தயாரிக்கப்பட்டதுடன், நிலுவை வருமான அறிக்கையும் 1003-01-00 வருமானத் தலைப்பிற்குரியதாக தயாரிக்கப்பட்டுள்ளது.	ஒவ்வொறு வாகனத்தினதும் ஒரு ஆண்டிற்காக அறவிட வேண்டிய நிலுவை சொகுசு வரி வெவ்வேறாக இனங்காண முடியுமானவாறு நிலுவை வருமான வரி அறிக்கை பேணிச் செல்ல வேண்டும்.

1.6.2 மூலதன செலவினம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான மூலதன செலவினம் கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

கணக்காய்வு அதவானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டில் வேரஹெர அலுவலகத்திற்கு செலவிட்ட ரூபா 1,198,815,516 ஆன மீண்டுவரும் செலவினம், 307-2-1-1-2509 ஆன மூலதன செலவின விடயத்தின் கீழ் மூலதன செலவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	வேரஹெர அலுவலகத்திற்காக செலவிட்டிருந்த 307-2-1-1-2509 மூலதன செலவு விடயத்தின் கீழ் கணக்கீடு செய்துள்ளதானது சாரதி அனுமதிப்பத்திர அச்சிடுவதற்குரிய அனைத்து செலவுகளையும் ஒரு கிரய நிலையமாக கருதி கிரயத்தை இனங்காணும் இலகுவிற்காக ஆகும். எனினும் எதிர்காலத்தில் 2026 ஆண்டிற்கான பாதீட்டை தயாரிக்கும் போது வேரஹெர அலுவலகத்திற்காக செலவிடப்பட்ட மீண்டுவரும் செலவினத்திற்காக தனித் தனியாக மதிப்பிட்டு மீண்டுவரும் செலவு விடயத்தின் கீழ் செலவு செய்ய நடவடிக்கை எடுக்கிறேன்.	மீண்டுவரும் செலவுகள் மூலதன நிதி ஏற்பாட்டின் மூலம் செய்யக் கூடாது.

1.6.3 கட்டுநிதி இணக்க கூற்றின் மீதி

கணக்காய்வு அதவானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
கட்டுநிதி இணக்க கூற்றின் மீதிக்கு ஆண்டிறுதியிலான கட்டுநிதி மீதியை கூட்டும் போது நிதி செயலாற்றல் கூற்றின் மீதியுடன் சமமாக வேண்டிய போதும் ரூபா 2,240,100 ஆன வித்தியாசம் ஏற்பட்டிருந்தது.	2024/12/31 திகதிக்கு நிதி செயலாற்றல் கூற்றின் மீதி மற்றும் கட்டுநிதி இணக்க கூற்றின் மீதிக்கு இடையிலான வித்தியசாத்திற்கு காரணமாக இருப்பதானது திணைக்கள புத்தகங்களில் கணக்கீடு செய்ய இயலாதிருந்த வருமானமாகும். அது 2025/03/28 திகதி ஜர்னல் இலக்கம் 25/006 மூலம் சரிசெய்யப்பட்டுள்ளது.	சுற்றறிக்கை ஏற்பாட்டின் பிராகரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.6.4 நிதியல்லாத சொத்துக்கள்

நிதிக்கூற்றுகளிற்குரிய நிதியல்லாத சொத்துக்களை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன

கணக்காய்வு அதவானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
மீகஹகிவுல கட்டிட நிர்மாணம் மற்றும் தொடுதல் முறையில் விசாரணை மேற்கொள்வது (307-2-1-10-2102) மற்றும் தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் (307-2-1-1-2102) எனும் செலவினை விடயங்களில் மூலம் ஏனைய திணைக்களங்கள் மற்றும் 11 அமைச்சுக்களின் தலைப்புகளின் கீழ் மீளாய்வாண்டினுள் ரூபா 41,138,080 ஆன மூலகன செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ள போதும் கொள்வனவு செய்யப்பட்ட அந்த சொத்துக்களை கணக்கீடு செய்யாத காரணத்தால் நிதியல்லாத சொத்துக்கள் அந்த அளவினால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.	2024 ஆண்டுக்குரியதாக 307-2-1-10-2104 எனும் செலவின விடயங்கள் மூலம் மாவட்ட அலுவலக செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதானது மாவட்ட அலுவலக கட்டிட திருத்தங்களுக்காக மற்றும் மேம்படுத்துவதற்காக ஆகும். அவ்வாறான செலவுக்ள மூலம் சொத்துக்கள் உருவாக்கல் மேற்கொள்ளப்படததனால் சொத்துக்களாக கணக்கீடு செய்யப்படவில்லை. எதிர்காலத்தில் 2026 ஆண்டுகளுக்குரியதாக இவ்வாறான செலவினங்களிற்காக நிதி ஏற்பாடுட்டை கட்டிட திருத்தங்கள் மற்றும் மேம்படுத்தல் (2001) எனும் செலவின விடயத்தின் கீழ் மதிப்பீடு செய்து செவிட நடவடிக்கை எடுக்கிறேன். 307-2-1-1-2102 செலவின தலைப்பில் கேகாலை மாவட்ட அலுவலகத்திற்கு அத்தியவசிய உபகரணங்களை கொள்வவு செய்வதற்காக ரூபா 60,000 ஆன நிதி ஏற்பாடு வழங்கியதுடன், அது பொருள் பதிவேட்டில் உள்ளடக்கப்படாததால் இந்த ஆண்டில் பிரதான அலுவலகத்தின் சொத்துக்களில் உள்ளடக்க நடவடிக்கை எடுக்கிறேன்.	மூலதன செலவினம் தொடர்புபடும் செலவின தலைப்பின் ஊடாக சொத்துக்கள் கணக்கீடு செய்யப்பட வேண்டும்

1.6.5 நிதிச் சொத்துக்கள்

அரச உத்தியோகத்தர்களின் முற்பண ''பீ'' கணக்கு

கணக்காய்வு அதவானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2019 ஜுன் 27 திகதிய இலக்கம் 05/2019 கொண்ட அரச நிதி சுற்றறிக்கை மற்றும் 2020 ஆகஸ்ட் 28 திகதிய இலக்கம 01/2020 கொண்ட அரச நிதி சுற்றறிக்கையின் 3.1 பந்தியின் நிதிப் பிரமாணம் 113(6)(ஆ) கீழ் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டி இலக்கம் 01 மூலம், இடமாற்றம், மரணித்தல், ஓய்வுபெறுதல், பணித்தடை, வெளிநாடு செல்ல, சேவையை விட்டுச் செல்ல போன்ற காரணங்களால் காலம் கடந்த கடன் மீதியை அறவிடுவது தொடர்பாக பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் காட்டப்பட்டுள்ள போதும், 05 ஆண்டுகளை விட காலம் கடந்த அவ்வாறான ரூபா 1,673,874 ஆன கடன் மீது தொடர்பாக மேற்குறித்த ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	நி.பி. 113(6)(ஆ) கீழ் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டி இலக்கம் 01 மூலம் பல்வேறு காரணங்கால் காலம் கடந்த கடன்களை அறவிடுவது தொடர்பாக பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் பிரகாரம் நடவடிக்கை எடுத்து செயலாளர், போக்கு வர்த்து நெடுஞ்சாலை, துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவை அமைச்சினால் அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்திற்கு 2024.08.12 திகதியும், 2024.10.25 திகதி செயலாளர், போக்கு வர்த்து நெடுஞ்சாலை, துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவை அமைச்சிற்கும் அனுப்பப்பட்டுள்ளது. எனினும் 2024.11.11 திகதி அரச நிதித் திணைக்களத்தின் மூலமும் 2024.11.19 திகதி செயலாளர், போக்கு வர்த்து நெடுஞ்சாலை, துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவை அமைச்சினாலும் எம்மால் சுட்டிக்காட்டி 10 ஆண்டுகளின் தகவல்களை மாத்திரம் கடன் அறவிட எடுக்கப்பட்ட போதிய செயற்பாடுகளாக நியாயப்படுத்த முடியாதது என அறிவிக்கப்பட்டுள்ளது.	காலம் கடந்த கடன் மீதிகள் தொடர்பாக சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.6.6 தேறிய சொத்துக்கள்/உரிமை மூலதனம்

கணக்காய்வு அதவானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2024 திசெம்பர் 16 திகதிய இலக்கம் 06/2024 கொண்ட அரச கணக்குகள் வழிகாட்டியின் 7.9 பந்தி பிரகாரம் முற்பணக் கணக்குகளின் பெறுமதியிலிருந்து வைப்புக் கணக்குகளின் பெறுமதியை கழித்த பின்னர் தேறிய சொத்துக்களின் பெறுமதி ரூபா	மீளாய்வாண்டில் திறைசேரியில் தேறிய சொத்துக்கள் ரூபா 123,271,821 ஆக வேண்டிய போதும் அது ரூபா 121,723,524 ஆக நிதி நிலைமை மீதான கூற்றில் அறிக்கையிடப்பட்டிருந்ததுடன் வித்தியாம் ரூபா 1,548,297 ஆனது. இந்த வித்தியாசத்திற்கு	சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் திறைசேரிக்கு தேறிய சொத்துக்களை கணக்கிட்டு அறிக்கையிட வேண்டும்.

	123,271,821 ஆக வேண்டிய போதும், மீளாய்வாண்டு நிதி நிலைமை மீதான கூற்றினுள் (ACA-P) தேறிய சொத்துக்கள் ரூபா 121,723,524 ஆக உள்ளடக்கப்பட்டிருந்தது.	காரணம் ரூபா 1,548,297 ஆன தீர்க்கப்படாத கட்டுநிதி மீதியொன்று காணப்படுவதாகும். அந்த மீதியிலிருந்து ரூபா 1,529,147 ஆன அளவு தற்போது சரிசெய்யப்பட்டுள்ளது. மேலும் ரூபா 19,150 ஆன தேர்த்தல் முற்பண மீதியொன்று எஞ்சியுள்ளதுடன் அதனை விரைவில் தேர்த்தல் அலுவலகத்திலிருந்து பெற்று சரி செய்கிறேன்.	

1.6.7 கட்டுநிதி மீதி

	கணக்காய்வு அதவானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	கட்டுநிதி கணக்குகள் மீதான கூற்றில திறைசேரி புததகம் பிரகாரம் மீதி ரூபா 638,247 ஆனதுடன், திணைக்கள புத்தகங்கள் பிரகாரம் அம் மீதி 1,548,297 ஆனது. இதன் காரணமாக இரண்டு கட்டுநிதி கணக்குகள் மீதிகளிற்கு இடையே ரூபா 910,050 ஆன தெளிவற்ற வித்தியாசமொன்று உருவாகியிருந்தது.	தீர்க்கப்படாத தேர்தல் முற்பண மீதியொன்று காணப்பட்டதுடன் அம் மீதியிலிருந்து ரூபா 1,529,197 ஆன அளவு தற்போது சரிசெய்யப்பட்டுள்ளது. தேலும் ரூபா 19,150 ஆன தேர்த்தல் முற்பண மீதியொன்று எஞ்சியுள்ளதுடன் அதனை விரைவில் சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன்.	2024 திசெமபர் 31 திகதிக்கு திணைக்கள புத்தகங்கள் பிரகாரம் கட்டுநிதி மீதியொன்று காணப்படாதவாறு செயற்பட பொறுப்பேற்க வேண்டும்.
(ஆ)	2024 திசெமபர் 31 திகதிக்கு கட்டுநிதி கணக்கு மீதான கூற்றில் ரூபா 638,247 ஆன மீதி, 2024 திசெமபர் 31 திகதிக்கு நிதி செயலாற்றுகை கூற்றில் கட்டுநிதி மீதியாக காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.	கட்டுநிதி கணக்கில் மீதியொன்று காணப்பட்ட போதும் அந்த குறைபாடுகளை கவனத்திற் கொள்ளாது நிதி செயலாற்றுல் கூற்றை சரியாக தயாரித்திருப்பதன் காரணமாக நிதி செய்லாற்றல் கூற்றில் மீதியொன்று காண்பிக்கப்படவில்லை.	நிதிக்கூற்றுக்களில் ஒவ்வொறு படிவங்கள் மூலமும் தகவல்ளை அறிக்கையிடும் போது 2024 திசெமபர் 31 திகதிக்கு காணப்படும் உள்ளவாறான தகவல்களை வெளிப்படுத்த வேண்டும்.

1.6.8 காணாமல் போன வவுசர்கள்

கணக்காய்வு அதவானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
நிதிப்பிரமாணம் 272(1) மற்றும் 545(4) பிரகாரம் கொடுப்பனவு செய்யப்பட்ட அனைத்து வவுசர்களும் வரிசை இலக்கத்திற்கு தயாரித்து	07 வவுசர்கள் வேறஹெர அலுவலகத்திலிருந்து கிடைக்க வேண்டியதாகவுள்ளது.	2024 திசெமபர் 31 திகதிக்கு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாத

கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டிய போதும், கூட்டுத் தொகை ரூபா 3,129,422 கொடுப்பனவு செய்து விடுவிக்கப்பட்ட 16 வவுசர்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததுடன், உரிய பரீட்சிக்குட்பட்ட கூட்டுத் தொகை ரூபா 104,057 ஆன 03 வவுசர்களிற்குரிய வவுசர்கள் மற்றும் துணை ஆவணங்களின் மூலப்பிரதிக்கு பதிலாக நிலற்பிரதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.	அந்த வவுர்களை அழைப்பித்துக் கொண்டு வவுசர் கோவையை பூரணப்படுத்த நடவடிக்கை எடுக்கிறேன்	வவுசர்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவக்கை எடுக்க வேண்டும்.

1.6.9 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

கணக்காய்வு அதவானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
நிதிப்பிரமாணம் 447 பிரகாரம் திணைக்கள ஒதுக்கீட்டு கணக்கு (அங்கீகார செலவு) பேரேட்டை நாளாதுவரையாக பேணியிருக்கவில்லை.	திணைக்கள ஒதுக்கீட்டு செலவின பேரேட்டை பேணிச் சென்ற போதும் அதனை சரியாக நாளாதுவரை ஆக்கப்பட்டிருக்காததுடன், இந்த ஆண்டில் அதனை சரியாக நாளாதுவரையாக பேணிச் செல்ல நடவடிக்கை எடுக்கிறேன்.	நிதிப்பிரமாணம் 447 இல் குறிப்பிடப்படும் ஏற்பாடுகள் உள்ளடங்கும் வகையில் 138 ஆம் பொது படிவத்தின் பிரகாரம் திணைக்கள ஒதுக்கீட்டு கணக்கு (அங்கீகார செலவு) பேரேட்டை நாளாதுவரையாக பேணிக் கொள்ள வேண்டும்.

2. ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகிறேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியிருந்தன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

3. நிதி மீளாய்வு

3.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அதவானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	10 மீண்டுவரும் செலவு விடயத்திற்காக மிகை நிதிஏற்பாட்டை செய்துள்ள காரணத்தால்	செலவின கட்டுப்பாட்டு சுற்றறிக்கை பிரகாரம் மீண்டுவரும் செலவுகளை சிக்கனமாக செலவு செய்ததால் இவ்வாறாக மீதியாகியுள்ளது. எனினும்	சரியான எதிர்வு கூறல்களுடன் பாதீட்டு மதிப்பீடுகளை தயாரிக்க நடவடிக்கை

	நிதிஏற்பாட்டை பயன்படுத்திய பின்னர் ரூபா 1,410,332,471 ஆன நிதிஏற்பாடு எஞ்சியிருந்தது. மேற்குறித்த நிதி ஏற்பாடடு மீதி 19 சதவீதம் முதல் 100 வரையான வீச்சளவை கொண்டிருந்தது.	307-2-1-1-1409 செலவு விடயம் புதிய பதிவுசெய்த வாகன இலக்க தட்டுச் செலவு 2024.04.30 திகதி இருந்த ஒப்பந்த உடன்படிக்கைக் காலம் முடிவடைந்த காரணத்தினால் அந்த ஆண்டின் எஞ்சிய காலத்திற்காக கொடுப்பனவுகள் இடம்பெறாததால் அந்த செலவினத் தலைப்பில் நிதிஏற்பாடு எஞ்சியுள்ளது. 307-2-1-12-1409 மின்வலு வாகன தலைப்பின் அந்த செயற்திட்டம் ஆரம்பிக்கப்படாத காரணத்தால் அந்த தரவுத் தொகுதிக்காக ஒதுக்கிய அனைத்து நிதிஏற்பாடும் எஞ்சியது. எதிர்காலத்தில் அவ்வாறு இடம்பெறாதிருக்க நடவடிக்கை எடுக்கிறேன.	எடுக்க வேண்டும்.
(ஆ)	மூலதன செலவு விடயததிற்காக சரியான எதிர்வு கூறல்களின்றி நிதிஏற்பாடடை பெற்றுக் கொண்டதால் 04 மூலதன செலவு விடயததிற்கான நிதிஏற்பாடுகள் பயன்படுத்திய பின்னர் ரூபா 24,382,409 ஆன நிதிஏற்பாடு எஞ்சியிருந்தது. அந்த நிதிஏற்பாட்டு மீதி 14 சதவீதம் முதல் 76 வரையான வீச்சளவை கொண்டிருந்தது.	மூலதன செலவு விடயததிற்காக நிதிஏற்பாட்டை பெற்றுக் கொண்ட போதும் அந்த மூலதன செயற்திட்டம் இடம்பெறாததால் அதற்குரிய கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படாததன் மீது இவ்வாறு நிதிஏற்பாடு எஞ்சியுள்ளது.	சரியான எதிர்வு கூறல்களுடன் பாதீட்டு மதிப்பீடுகளை தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	புதிய பதிவு வாகன இலக்கத் தட்டு (01-1409) செலவு விடயததிற்காக மிகை நிதிஏற்பாட்டை பெற்றுக் கொண்டமை மற்றும் 10 மீண்டுவரும் செலவு விடயங்களிற்கு மற்றும் 03 மூலதன செலவு விடயங்களிற்குரிய செலவுகள் உரியவாறு எதிர்வு கூறப்படாததன் காரணமாக வாகன இலக்கத் தட்டு செலவு விடயத்திலிருந்து ரூபா 216,400,000 மேற்குறித்த 13 செலவு விடயங்களிற்கும் நிதிப்பிரமாணம் 66/69 பிரகாரம் நிதிஏற்பாட்டை மாற்ற வேண்டி இருந்தது.	புதிய பதிவு வாகன இலக்கத் தட்டு (01-1409) செலவு விடயததிற்காக நிதிஏற்பாட்டை பெற்றுக் கொண்ட போதும் 2024 ஆண்டில் வாகன இலக்கத் தட்டு தயாரிப்பை தற்காலிகமாக நிறுத்த வேண்டி ஏற்பட்டததல் அந்த செலவுத் தலையில் நிதிஏற்பாடு எஞ்சியது. அதன் காரணமாக அந்த எஞ்வசிய நிதிஏற்பாட்டை நி.பி. 66/69 பிரகாரம் மாற்றப்பட்டது.	சரியான எதிர்வு கூறல்களுடன் பாதீட்டு மதிப்பீடுகளை தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஈ)	மீண்டுவரும் செலவின விடய இலக்கத்தின் 12-1409 கீழ் மின்சார மோட்டார் வாகன தகவல் தொகுதியை (இ-மோட்டரிங்) அபிவிருத்தி செய்வதற்காக மீளாய்வாண்டில் ரூபா 833,600,000 நிதிஏற்பாடு வழங்கப்பட்ட போதும் அந்த நிதிஏற்பாட்டில் எத்தொகையும் செலவிடப்படவில்லை.	மின்சார மோட்டார் வாகன தகவல் தொகுதிக்காக (இ-மோட்டரிங்) 12-1409 செலவு விடயத்தின் கீழ் நிதிஏற்பாடு வழங்கப்பட்ட போதும் தகவல் தொகுதியை அபிவிருத்தி செய்யும் நடடிக்கைகள் நிறுன்றுள்ளதால் அந்த நிதிஏற்பாடு பயன்படவில்லை.	இந்த செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்த தேவையான அனைத்து அங்கீகாரமும் கிடைத்திருந்தால் மாத்திரம் நிதிஏற்பாடடை பெற்றுக் கொள்ள வேண்டும்.

3.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளிற்கு உட்படல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அதவானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தர கருத்துரை	பரிந்துரை
(அ)	2025 சனவரி மாதத்தில் செலுத்தி விடுவிக்கப்பட்டிருந்த ரூபா 465,936 ஆன கடந்த ஆண்டிற்குரிய செலவு, 2024 ஆண்டு நிதிக்கூற்றுக்களில் பொறுப்பாக இனங்காணப்பட்டிருந்தது.	2025 சனவரி மாதம் செலுத்தியிருந்த ரூபா 465,936 தொகை தவறுதலாக 2024 ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் பொறுப்புக்களில் உள்ளடக்கப்படவில்லை. எதிர்காலத்தில் அவ்வாறான தவறுகள் இடம்பெறாதிருக்க அறிவுரை வழங்கப்பட்டது.	எதிர்வரும் ஆண்டில செலுதவுள்ள அனைத்து பொறுப்புக்களையுமட இனங்கண்டு நிதிக்கூற்றுக்கள் மூலம் வெளிப்படுத்த வேண்டும்.
(ஆ)	கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் பொறுப்புக்கள் கூற்றில் காட்டியிருந்த பொறுப்புக்கள் பெறுமதி மற்றும் திறைசேரி கணனி அச்சுக் குறிப்புகளில் (SA-92) திரண்ட பொறுப்பு மற்றும் பொறுப்புக்கள் கூற்றின் பொறுப்பு பெறுமதிக்கு இடையே ரூபா 58,172,711 ஆன வித்தியாசம் ஆனது.	2024 திசெம்பர் 31 திகதிக்கு பொறுப்புக்களின் கூட்டுத் தொகை ரூபா 78,536,934 ஆன போதும், அது திறைசேரி திரண்ட கடப்பாடு மற்றும் பொறுப்புக்கள் மீதான அறிக்கையில் குறிப்பிட்டுள்ள இலக்கத்தை விட மாற்றம் அடைந்துள்ளது. அவ்வாறான தவறுகள் எதிர்காலத்தில் இடம்பெறாதிருக்க நடலடிக்கை எடுக்கிறேன்.	கடப்பாடு மற்றும் பொறுப்புக்களின் சரியான பெறுமதிகள் SA 92 படிவத்தில் உட்படுத்தப்பட வேண்டும்.

(இ)	நிதிப்பிரமானம் 94 மற்றும் 2017 ஏப்ரல் 27 திகதிய இலக்கம் 255/2017 கொண்ட அரச நிதி சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் பிரகாரம் நிதிஏற்பாட்டை விஞ்சி செலவுகளிற்காக கட்ப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்ள முடியாத போதும், மீளாய்வாண்டில் 03 செலவு விடயங்களின் கீழ் நிதிஏற்பாட்டை விஞ்சி கூட்டுத் தொகை ரூபா 48,712,408 ஆன கடப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டு இருந்தது.	நிதிப்பிரமானம் 94(2) பிரகாரம் வேரஹெர அலுவலகத்திற்காக வருகின்ற செலவு மற்றும் வாகன பராமரிப்பு செலவு அடுத்த நிதி ஆண்டின் செலவிடும் நோக்கில் ஏற்பாடுகளை விஞ்சி கடப்பாடுகளிற்கு கடப்பட்டிருந்தது.	நிதிப்பிரமானம் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் ஆண்டில் திணைக்கள நிதிஏற்பாட்டை விஞ்சி செலவிற்காக கடப்பாடுகளை எற்படுத்தக் கூடாது.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 பெறுகைகள்

	கணக்காய்வு அதவானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	**சாரதி அனுமதிப்பத்திரம் அச்சிடுவதற்காக பயன்படுத்தும் SRITIS கணனி மென்பொருளிற்காக பராமரிப்பு மற்றும் சேவை பெற்றுக் கொள்ளல்**		
	வடிவமைத்தல், இயக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் பயன்பாடு (BOT) எண்ணக்கருவின் கீழ் கொள்வனவு செய்த SRITIS கணனி மென்பொருள் 2020 அண்டில் அதன் மூல குறியீட்டுடன் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. 2021 மற்றும் 2022 ஆண்டுகளில் இந்த மென் பொருளிற்காக பராமரிப்பு சேவையை பெற்றுக் கொண்ட முறை பற்றிய கடிதக் கோவை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததுடன், 2023 மற்றும் 2024 ஆண்டுகளிற்காக உரிய டென்டர் நடைமுறையின்றி முறையே ரூபா 154,100,000 மற்றும் ரூபா 181,973,700 தொகைக்கு தனியார் நிறுவனமொன்றிடம் பராமரிப்பு மற்றும் சேவையை பெற்றிருந்தது. மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் வாகன பதிவு மற்றும் ஒப்படைப்பிற்கான தரவுத் தொகுதியுடன் ஒப்பிடுகையில்	சாரதி அனுமதிப்பத்திரம் அச்சிடுவதற்கான SRITIS தொகுதி 2009 ஆண்டில் திறந்த பெறுகையை மேற்கொண்டு Face Technologies மற்றும் Metropolitan கம்பனிக்கும் 2009 ஆண்டு முதல் ஐந்து ஆண்டுகளிற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது. அந்த உடன்படிக்கை கால முடிவில் 05 சந்தர்ப்பங்களில் அமைச்சரவை அங்கீகாரத்தின் கீழ் ஒப்பந்த காலத்தை 2016 முதல் 2020 வரை நீடிக்க நடவடிக்கை எடுத்துள்ளது. எவ்வாறாயினும் இலக்கம் 19/3524/225/011 மற்றும் 2020/01/08 திகதிய அமைச்சரவை தீர்மானம் மீது சாரதி அனுமதிப்பத்திரத்தின் சொத்துக்களை திணைக்களத்திற்கு சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அந்த அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் 2021/07/01 திகதி முதல் சேவை	அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையில் குறிப்பிடப்படும் ஏற்பாடுகள் மற்றும் பெறுகையின் நோக்கத்தை அடைந்து கொள்ளும் வகையில் போட்டி விலைகளை பெற்றுக் கொள்வதற்காக பெறுகை நடைமுறையில் பண்டங்கள் மற்றும் சேவைகளை கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த தரவுத் தொகுதி மிகவும் எளிய தரவுத் தொகுதியொன்றானமை, வாகன பதிவு தரவுத் தொகுதியின் வராமரிப்பு மற்றும் சேவை கிரயம் ரூபா 10,000,000 ஆனமையை கவனத்திற் கொள்ளும் போது, சாரதி அனுமதிப்பத்தரம் விநியோகிக்கும் தரவுத தொகுதியின் பராமரிப்பு மற்றும் சேவைக்காக மிகவும் அசாதாரண கிரயமொன்றை செய்துள்ளதாக அவதானிக்கப்பட்டது.
எவ்வாறாயினும் டெண்டர் நடைமுறையின்றி மென் பொருளின் வடிவமைப்பாளர்களுடன் எவ்வித தொடர்பும் இல்லாத நிறுவனமொன்றிற்கு மிகவும் அதிக கிரயத்திற்கு மென் பொருளின் பராமரிப்பு மற்றும் சேவையை வழங்கியமைக்கு காரணமாக அமைந்த விடயம் எதுவும் ஆவணப்படுத்தப்பட்டு இருக்கவில்லை.

வழங்குனருடன் சாரதி அனுமதிப்பத்திர தொகுதியக்காக விரிவான செயற்பாடு, சேவை மற்றும் பராமரிப்பு உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டுள்ளது.
20/0691/225/024 மற்றும் 2020/04/22 திகதிய மற்றும் 2020/07/01 திகதிய அமைச்சரவை தீர்மானம் பிரகாரம் சாரதி அனுமதிப்பத்திர தரவுத் தொகுதியை இலங்கை இராணுவப் படைக்கு சுவீகரித்துள்ளதுடன் அந்த 2021/01/01 முதல் 2023/09/12 வரையான காலத்தினுள் (Face Technologies மற்றும் Metropolitan கம்பனியான) மெட்ரோபொலிடன் எட்வான்ஸ் டெக்நொலொஜீஸ் தனியார் கம்பனியுடன் மேற்குறித்த செயற்பாட்டு, சேவை மற்றும் பராமரிப்ப உடன்படிக்கையின் கீழ் (ஒரு ஆண்டிற்கு ரூபா 154 மில்லியனிற்கு) இராணுவப் படையினால் சாரதி அனுமதிப்பத்திர தொகுதி செயற்பாட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
2023/09/13 திகதி முதல் இலங்கை இராணுவப் படையிலிருந்து மீண்டும் சாரதி அனுமதிப்பத்திர தொகுதியை திணைக்களத்திறகு சுவீகரித்த பின்னர் திணைக்களம் மேற்குறித்த உடன்படிக்கையின் கீழ் கலந்துரையாடி அந்த விலையிற்கே இறுதிமுனை தொகுதி செயற்பாட்டுடன் (Backend Service) 2024 ஆண்டிற்காக சேவை பெறப்பட்டுள்ளது.

(ஆ) சாரதி அனுமதிப்பத்திர அச்சிடலிற்கு பயன்படுத்தும் அச்சுப் பொறிகளின் சேவை மற்றும் பராமரிப்பிற்காக உடன்படிக்கை கைச்சாத்திடல்

சாரதி அனுமதிப்பத்திர அச்சிடலிற்கு பயன்படுத்தும் 2017 ஆண்டில் கொள்வனவு செய்துள்ள 02 அச்சுப்

திணைக்களத்திற்கு சொந்தமான அச்சுப் பொறிகள் மட்டுப்படுத்தப்பட்டு உள்ளமையால் 2017 ஆண்டில் கொள்வனவு செய்து அச்சுப்

அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையில் குறிப்பிடப்படும் ஏற்பாடுகள் மற்றும்

பொறிகளின் சேவை மற்றும் பராமரிப்பிற்காக எந்தவித பெறுகைகள் நடைமுறையுமின்றி ரூபா 14,700,000 இற்கு தனியார் கம்பனியொன்றுடன் சேவை உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்திக் கொண்டிருந்தது. இவ்வாறான புதிய அச்சுப் பொறியொன்றின் சந்தை விலை ரூபா 15 மில்லினிற்கும் 20 இற்கும் இடையில் காணப்பட்டமை, இந்த 02 அச்சுப் பொறிகளின் சந்தை பெறுமதி பராமரிப்பு கிரயத்தைவிட குறைய வேண்டியமையின் காரணமாக, பணத்திற்கான பெறுமதி எண்ணக்கருவிற்கு முரணாக அரச நிதியை செலவிட்டிருந்த இந்த சேவை உடன்படிக்கை சர்ச்சைக்குரியதாக இருந்தது.

பொறியை தொடர்ச்சியாக பயன்படுத்தும் போது பராமரிப்பு மற்றும் சேவை நடவடிக்கைகளிற்காக கூடுதல் தொகையை செலுத்த நேரிடுகிறது.

2021 ஆண்டில் இராணுவப் படை 09 பொறிகளை கொள்வனவு செய்ய திட்டமிட்ட போதும் ஒரு பொறியை மாத்திரம் கொள்வனவு செய்திருந்தது.

அதன் பின்னர் 2002 ஆண்டில் 06 பொறிகளை செய்ய மீண்டும் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொண்ட போதும் பாதீட்டு திணைக்களத்திடம் நிதிஏற்பாட்டை கோரிய சந்தர்ப்பத்தில் நிதிஏற்பாட்டை வழங்க முடியாது எனவும், இத்தருனத்தில் வாடகை அடிப்படையில் சேவையை பெற்றுக் கொள்ளுமாறும் அறிவித்திருந்தது.

தற்போது புதிய 02 அச்சுப பொறிகளை கொள்வனவு செய்ய பெறுகை நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டு குறித்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பெறுகையின் நோக்கத்தை அடைந்து கொள்ள முடியுமானவாறு போட்டி விலைகளை பெற்றுக் கொள்ள பெறுகைகள் செயன்முறையால் பண்டங்கள் மற்றும் சேவைகளை கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(இ) சாரதி அனுமதிப் பத்திர அச்சிடலை தனியார் கம்பனி ஒன்றிற்கு ஒப்படைத்தல்

வேரஹெர சாரதி அனுமதிப் பத்திர அச்சிடலிற்காக இலங்கை இராணுவப் படையினால் 2022 ஆண்டில் ரூபா 311 இற்கு ஒரு சாரதி அனுமதிப் பத்திர அட்டையை கொள்வனவு செய்திருக்கும் போது எந்தவித பெறுகை செயன்முறைகளும் இன்றி ஒரு தனியார் கம்பனியிலிருந்து மாத்திரம் விலைமணுவை அழைப்பித்து ஒரு அட்டைக்கு ரூபா 576 தொகை செலுத்த மற்றும் அச்சுக் கிரயத்தை செலுத்த உடன்படிக்கை செய்த காரணத்தால் 2023 செப்டம்பர் 15 முதல் 2024 ஜுலை மாதம் வரை அச்சிட்ட 507,807 அட்டைகளிற்கு

அதன் போது நாட்டில் நிலவிய இறக்குமதி கட்டுப்பாடு மற்றும் பொருளாதார நெருக்கடியின் முன் அச்சிட ஒன்றுதிரண்டிருந்த பின்னடைந்த சாரதி அனுமதிப்பத்திர அளவு கனிசமான அளவினால் அதிகரித்திருந்ததால் சாரதி அனுமதிப் பத்திரங்களை விரைவில் பொது மக்களிற்கு விநியோகிக்கும் அரசின் தேவைப்பாடு காரணமாக அமைச்சரவை பத்திர இலக்கம் அப/24/2115/809/005 மூலம் தனியார் கம்பனி ஒன்றிற்கு சாரதி அனுமதிப் பத்திர அட்டை அச்சிடுவதற்காக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்

அரசிற்கு நட்டத்தை ஏற்படுத்திய தரப்பினரிற்கு எதிராக தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகள் மற்றும் சிவில் சட்ட பிரமாணங்கள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	ஒரு அட்டைக்கு ரூபா 265 இனை (ரூபா 576 - ரூபா 311) கூடுதலாக செலுத்த நேரிட்ட காரணத்தால் ரூபா 134,568,855 தொகை அரசிற்கு நட்டம் ஏற்பட்டிருந்தது.	பிரகாரம் குறித்த அமைச்சரவை பத்திரம் மற்றும் உடன்படிக்கையில் குறிப்பிடப்படும் விலைகளின் பிரகாரம் குறித்த கம்பனியினால் அட்டைகளை வழங்கி அச்சிடப்பட்ட அட்டைக்கான கொடுப்பனவு மாத்தரம் செலுத்தப்பட்டுள்ளது. (அச்சிட்டுள்ள அட்டைகளின் எண்ணிக்கை ஆணையாளர் (சாரதி அனுமதிப் பத்திரம்) மற்றும் பிரதி ஆணையாளர் (சாரதி அனுமதிப் பத்திரம்) மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.	
(ஈ)	**சாரதி அனுமதிப் பத்திர அட்டை கொள்வனவு செய்தல்**		
(உ)	**வாகனங்களை இனங்காணும் இலக்கத்துடன் கூடிய இலக்கத் தட்டை வழங்கும் ஒப்பந்த விலை திருத்தம்.**		
(i)	சர்வதேச போட்டி விலைகள் கோரும் முறையில் விலைமனு கோரி ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுளள, செயற்படும் நிலையில் உள்ள உடன்படிக்கை ஒன்றிற்காக ஒரு டொலரிற்கு செலுத்தும் இலங்கை ரூபாவின் அளவு மாற்றம் அடைந்ததன் மீது உடன்பட்ட விலைகளின் திருத்தமொன்றிற்கு பெறுகைகள் வழிகாட்டியினுள் ஏற்பாடு உள்ளடங்காத போதும் உடன்படிக்கையின் விலை திருத்தத்தை நியாயப்படுத்தி அமைச்சரவை நியமித்த விலைகளை கலந்துரையாடும் குழுவொன்றை (CANC) நியமிக்குமாறும், அக்குழுவிற்கு உதவுவதற்காக செயற்திட்ட குழுவொன்றை நியமிக்குமாறும், மதிப்பிற்குரிய போக்குவரத்து அமைச்சரினால் அமைச்சரவைக்கு 2022 ஆகஸ்ட் 02 திகதி அமைச்சரவை பத்திரமொன்றை சமர்ப்பித்து இலக்கம் அப/22/1104/608/010 கொண்ட 2023 ஆகஸ்ட் 31 திகதிய அமைச்சரவை அனுமதி	2022 ஆண்டில் நிலவிய கொவிட் நிலைமை காரணமாக நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக அன்னிய செலாவணி விகிதம் அதிகரித்ததன் மீது காணப்படும் உடன்படிக்கை செய்த நிலைக்கு வாகன இலக்க தட்டுக்களை அச்சிட முடியாததால் அந்த உடன்படிக்கையின் இலக்கம் 30 நிபந்தனை பிரகாரம் டொலரின் பெறுமதி மாற்றமடைவதற்கு நெகிழ்வாக இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டாளரின் இலக்கம் IECD/6/15/002/01/2022 மற்றும் 2022.05.12 திகதிய கடிதம் மூலம் வெளியிட்டுள்ள 05/2022 செயற்பாட்டு அறிவுரை சுற்றறிக்கை மற்றும் நிதி அமைச்சினால் வெளியிட்டுள்ள இலக்கம் 03/2022 மற்றும் 2022.04.26 திகதிய தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் 79% விலை அதிகரிப்பை கோரி 2022.05.22 மற்றும் 2022.06.15 திகதிய கோரிக்கை	அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளில் காணப்படுமானால் மாத்திரம் அதற்கு இணங்கியதாக விலைகளை திருத்த வேண்டும்.

	பெறப்பட்டிருந்தது. வழங்கல் விலைகளை முடிவு செய்யும் ஏனைய எந்தவித விடயங்கள் தொடர்பாகவும் மதிப்பிடாது அன்னிய செலாவணி விகிதத்தின் மாற்றத்தை மாத்திரம் கவனத்திற் கொண்டு அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட விலைகளை கலந்துரையாடும் குழு (CANC) தமது குழு அறிக்கையை தயாரித்திருந்ததுடன் வழங்குனருடன் கலந்துரையாடி உடன்படும் விலை திருத்தத்தை வழங்குவது பொருத்தமென பரிந்துரைத்திருந்தது.	முன்வைக்கப்பட்டுள்ளது. இக் கோரிக்கை தொடர்பாக கவனத்திற் கொள்வதற்காக முன்வைக்கப்பட்ட 2022.08.02 அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு 2022.08.22 கிடைத்த முடிவின் பிரகாரம் அமைச்சரவையினால் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், அக் குழு அறிக்கை 2022.11.22 திகதி சமர்ப்பித்து வெளிநாட்டு அன்னிய செலாவணி விகிதம் அதிகரிப்பதற்கு ஒத்ததாக குறித்த வழங்குனருடன் கலந்துரையாடி பொருத்தமான விலை அதிகரிக்கை வழங்க பரிந்துரைத்துள்ளது.	
(ii)	அமைச்சரவை முடிவின் பிரகாரம் உடன்படிக்கை நிபந்தனை இலக்கம் 30 இற்கிணங்க விலை திருத்தமொன்றை வழங்குவதற்காக உடன்படிக்கையில் சட்ட ஏற்பாடுகள் காணப்படுகின்றதா என சட்டமா அதிபரை வினவியிருந்ததுடன் “எவ்வித சட்ட ஏற்பாடுகளையும் குறிப்பிடாது மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட ஊடக அறிவித்தலில் உள்ளடங்கும் விடயங்கள், உடன்படிக்கையின் 30 பிரிவிற்குள் உள்ளடங்கும் விடயப் பரப்பிற்கு உரித்தற்றதாக” சட்டமா அதிபரினால் சுடடிக் காட்டப்பட்டிருந்தது. எனினும் சட்டமா அதிபரின் அபிப்பிராயத்தை தொடர்புபடுத்திக் கொள்ளாது மற்றும் அமைச்சரவை அங்கீகாரமின்றி 62.5 சதவீத விலை அதிகரிப்பை வழங்க முடியுமானவாறு ஒப்பந்ததாரருடன் செய்து கொண்டிருந்த உடன்படிக்கையின் 14 ஆம் பிரிவை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.	இந்த பெறுகைக்குரிய வழங்குனரால் விலை அதிகரிப்பை கோருவதானது அன்னிய செலாவணி விகிதம் அதிகரித்தமையை அடிப்படையாகக் கொண்டாகும். அதனால் வாகன இலக்க தட்டிற்கான மூலப்பொருள் இறக்குமதிக்காக அன்னிய செலாவணி விகிதம் அதிகரித்தமை தாக்கம் செலுத்துவதால் 79% அதிகரிப்பை வழங்குனர் நிறுவனம் கோரியுள்ளது. அத்தினதியில் அன்னிய செலாவணி விகித அதிகரிப்பு 2018 ஆண்டிற்கு ஒப்பாக 97% இனால் அதிகரித்துள்ளதாக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு கணக்கிட்டுள்ளது. அவ்வாறே பணவீக்கம் மற்றும் எரிபொருள் விலை அதிகரிப்பு தொடர்பாக அவதானிக்கப்பட்டுள்ளது. அது தொடர்பாக கவனம் செலுத்தி வாகன இலக்க தட்டிற்காக செலுத்தும் விலையில் ஒருசில அதிகரிப்பு ஏற்பட வேண்டுமென தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அவதானித்துள்ளது. அதன் பிரகாரம் விலை அதிகரிப்பிற்காக வழங்குனருடன் கலந்துரையாடி பொருத்தமான விலையை தீர்மானிக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது.	அரச மற்றும் அரசுடன் இணைந்த நிறுவனங்களிற்காக வழங்கியுள்ள வழிகாட்டல் மற்றும் வழமைகளை கவனத்திற் கொண்டு இவ்வாறான விசேட சந்தர்ப்பங்களில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஊ) வேரஹெர அலுவலகத்தில் கணனி மற்றும் உதிரிப் பாகங்களிற்கான சேவை உடன்படிப்கை வேரஹெர சாரதி அனுமதிப்பத்திரம் விநியோகிக்கும் செயன்முறையுடன் தொடர்பான அட்டைகளை அச்சிடும் பொறிகள் மற்றும் SriTis கணனி மென்பொருள் தவிர கணனி மற்றும் உதிரிப் பாகங்கள், சேவை மற்றும் பராமதிப்பு தேவைப்பாட்டின் பிரகாரம் 12 பிரதான வகைகளின் கீழ் இனங்காணப்பட்டிருந்தன. அவற்றில் 07 வகைகளிற்கு போட்டி விலைகளை கோரி சேவை வழங்குனர்களை தெரிவு செய்திருந்ததுடன் 05 வகைகளிற்காக ஒரு மணுதாரரிடமிருந்து மாத்திரம் விலைமணு கோரி அந்த மணுதாரரின் சேவை பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. ஒருதலை பட்சமாக விலைமணு கோரிய 05 வகை உருப்படிகள் தொடர்பாக போட்டி விலைகளின் மீது சேவை வழங்களை பெற்றுக் கொள்ள இயலாமை தொடர்பில் எவ்வித ஆவணமும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் குறிப்புக்களில் அல்லது கோவையில் உள்ளடக்காது மேற்குறித்த சேவை வழங்கல், தெரிவு செய்யப்பட்ட ஒரு கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது.	2021 ஆண்டு முதல் 03 ஆண்டுகள் இலங்கை இராணுவத்தல் அனைத்து செயற்பாட்டு நடவடிக்கைகளையும் மேற்கொண்ட திணைக்களத்தின் சாரதி அனுமதிப்பத்திரம் விநியோகிக்கும் கணனித் தொகுதி மற்றும் அதனுடன் இணைந்த அனைத்து நடவடிக்கைகளையும் மீண்டும் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திற்கு கையேற்கப்பட்டது 2023 ஒக்டோபர் மாதத்திலேயாகும். இந்த கையேற்பின் போது இப் பணிகளை மீண்டும் திணைக்களத்திற்கு ஒப்படைக்க இலங்கை இராணுப் படை எந்தவித இணக்கப்பாட்டையும் காட்டாததுடன் அதன் காரணமாக இந்த கையேற்பு திணைக்கள உத்தியோகத்தர்களிற்கு எந்தவிதத்திலும் சுமூகமான பணியாக இருக்கவில்லை. இங்கு திணைக்கள உத்தியோகத்தர்கற்கு இப்பணி மிகவும் சவாலாக இருந்தது. இந்த நிலைமையின் மீது சேவையை நடாத்திச் செல்வதன் ஆபத்தை குறைத்துக் கொள்ள சேவை உடன்படிக்கையை தொடர்சியாக பேணிச் செல்வது அத்தியவசிமாவதுடன் பலவழிகளில் தோடிக் கொண்ட தகவல்களின் பிரகாரம முன்னர் பேணி வந்த சேவை உடன்படிக்கையை அவ்வாறே பேணிச் செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டது.	இந்த சேவைக்காக மொத்த கிரய மதிப்பீட்டை தயாரித்து உரிய அதிகாரத்துடன் அதற்குரிய பெறுகைகள் முறையை முடிவு செய்து அதன் பிரகாரம் அழைப்ப வேண்டிய குறைந்தபட்ச விலைமணுவை அழைப்பித்து தகுதியான வழங்குனரை தெரிவு செய்ய வேண்டும்.

4.2 முகாமைத்துவ பலவீனங்கள்

	கணக்காய்வு அதவானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	**ஒரு நாள் சேவையின் கீழ் சாரதி அனுமதிப்பத்திரம் அச்சிடுதல்**		
(i)	வேரஹெர ஒரு நாள் சேவையின் கீழ் ஒரு நாளைக்கு 200 சாரதி அனுமதிப்பத்திரங்களை அச்சிடும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது. எனினும் 200 சாரதி அனுமதிப்பத்திரங்களிற்கு மேலதிகமாக ஏற்கனவே சாதாரண முறையில் விண்ணப்பித்து சாரதி அனுமதிப்பத்திரத்தை பெற்றுள்ள நபர்களிற்காக ஒரு நாள் சேவைக் கட்டணத்தை செலுத்தி ஒரு நாளைக்கு கிட்டத்தட்ட 300 இற்கும் 400 இற்குமிடையிலான அளவு அட்டைகளை அச்சிட வேரஹெர முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருந்தது. இந்த அட்டைகளை பெற்றுக் கொள்வதற்காக குறித்த நபர்கள் டோகன் எடுத்திருக்காமை, அச்சிடப்பட்டுள்ள அட்டைகளை பெற்றுக் கொள்ள நபர்கள் சமுகமளித்தமைக்கான தகவல்கள் ஆவணப்படுத்தப்படாமை மற்றும் சாதாரண முறையில் சாரதி அனுமதிப்பத்திரத்தை பெற்றவர்களிற்கு வேரஹெர வளவிற்கு வந்து ஒரு நான் சேவையின் மூலம் சாரதி அனுமதிப்பத்திர அட்டைகளை பெற்றுக் கொள்ள முடியுமென பொது மக்களிற்கு தகவல் பரிமாற்றப்படாமை போன்ற விடயங்களை கவனத்திற் கொள்ளும் போது கடந்த 09 மாத காலத்தினுள் விநியோகிக்கப்பட்ட 61,177 அளவான அட்டைகள் சட்டவிரோதமாக வழங்கப்டுவதாக கிடைக்கும் பொது மக்கள் பிரதிநிதித்துவம் கணக்காய்வினால் தவிர்க்க முடியாததாக இருந்தது.	தினந்தோறும் ஒரு நாள் சேவையின் கீழ் (online appointment) 500 விண்ணப்பதாரர்களிற்கு விண்ணப்ப் படிவங்களை வழங்க சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக, (a). ஏனைய நிகழ்நிலை முறையில் சாதாரண சேவையின் கீழ் விண்ணப்பித்து வேரஹெர அலுவலகத்திற்கு வருகைதந்து ஒரு நாள் சேவையின் கீழ் சாரதி அனுமதிப்பத்திரத்தை கோரும் விண்ணப்பதாரர்கள் (b). அவ்வாறே ஒரு நாள் சேவைக்காக நேரத்தை ஒதுக்கிக் கொள்ளாத எனினும் வெளிநாடு செல்லல், தொழில் ஒன்றிற்கான நேர்முகப் பரீட்சைக்குச் செல்லவுள்ள சந்தர்ப்பங்களில் அதற்கான ஆவணங்களை (உறுதி செய்வதற்காக) முன்வைக்கும் சந்தர்ப்பங்களில் ஒரு நாள் சேவை சந்தர்ப்பத்தை வழங்குதல். (c) அவ்வாறே அத்தியசிய சேவைகளில் மருத்துவ சேவையில் ஈடுபட்டுள்ள நபர்கள், பொலிஸ் திணைக்களத்தில் மற்றும் முப்படை உத்தியோகத்தர்கள் மற்றும் அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் நேர்முக பரீட்சைக்கு தோற்றும் விண்ணப்பதாரர்கள் (குறித்த ஆவணங்களுடன்) செய்யும் கோரிக்கைகளை கவனத்திற் கொண்டு ஒரு நாள் சேவையை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	சாதாரண முறையில் பெற்றுக் கொண்ட சாரதி அனுமதிப்பத்திரங்களில் ஒரு நாள் கட்டணத்தை செலுத்தாது அவசர சந்தர்ப்பங்களாகக் கருதி சாரதி அனுமதிப்பத்திரங்களை அச்சிட நேரிடும் சந்தர்ப்பங்களில் கட்டுப்பாட்டு முறைமையொன்றை செயற்படுத்துதல் மற்றும் அதன் பிரகாரம் அந்த அவசர தேவைப்பாட்டிற்கு குறித்த விண்ணப்பதாரரின் எழுத்துமூல கோரிக்கையின் நியாயதன்மையை கருத்திற் கொண்டு அதிகாரமுடைய உத்தியோகத்தர் ஒருவரினால் வழங்கப்படும் அங்கீகாரத்தை பதிவிட்டு பேணிச் செல்ல வேண்டும்.

(ii)	பின்னலையான இருப்பில் உள்ளடங்கும் சாதாரண முறையில் பெற்றுக் கொண்ட சாரதி அனுமதிப்பத்திரங்களில் ஒரு நாளைக்கு 200 இற்கும் 250 இற்கும் இடையிலான அளவு ஒரு நாள் கட்டணம் செலுத்தாது ஆணையாளர் (சாரதி அனுமதிப்பத்திரம்) மற்றும் பிரதி ஆணையாளர்களினால் அவசர தேவைபாடாக கருதி அச்சிட்டு வழங்குமாறு அச்சுப் பிரிவிற்று கட்டளை வழங்கப்பட்டிருந்தது. 2023 ஆண்டில் திசெம்பர் முதல் 2024 ஆகஸ்ட் வரை 21,890 சாரதி அனுமதிப்பத்திரங்கள் இவ்வாறு அச்சிடப்பட்டிருந்தன. மேற்குறித்த அங்கீகாரத்தை வழங்குவதற்க அடிப்படையாக அமைந்த காரணங்கள் ஆவணப்படுத்தப்பட்டு இருக்காததுடன், அதற்காக ஒழுங்கான முறைமையொன்று அறிமுகம் செய்யப்பட்டிருக்கவில்லை.	அவ்வாறே சாதாரண சேவையின் கீழ் சாரதி அனுமதிப்பத்திர பணிகளிற்காக விண்ணப்பித்துள்ள எனினும் சாரதி அனுமதிப்பத்திரம் அச்சிடப்படாத போதும் விண்ணப்பம் வலுப்பெற்றுள்ள சந்தர்ப்பங்களில் விண்ணப்பதாரரின் கோரிக்கையின் மீது சாரதி அனுமதிப்பத்திர அட்டை அச்சிட்டு வழங்கப்படும். அதற்காகவும் விண்ணப்பதாரர் உறுதிப்படுத்துவதற்காக உரிய ஆவணங்கள் மற்றும பதவிநிலை உத்தியோகத்தரின் அல்லது மேற்பார்வை உத்தியோகத்தரின் அங்கீகாரம் தேவையாகும். இவ்விடத்திலும் குறித்த அனைத்து ஆவணங்களும் கணனிமயப்படுத்தி ஸ்கேன் செய்யப்படும். அவ்வாறே 2024 ஜுலை மாதம் முதல் கணக்காய்வினால் சுட்டிக் காட்டியவாறு கணனிமயப்படுத்தி ஸ்கேன் செய்வதற்கு மேலதிகமாக குறித்த தகவல்கள் பதிவேடொன்றாகவும் பேணிச் செல்லப்படும்.	சாதாரண முறையில் பெற்றுக் கொண்ட சாரதி அனுமதிப்பத்திரங்களில் ஒரு நாள் கட்டணம் செலுத்தாது அவசர தேவைப்பாடக கருதி சாரதி அனுமதிப்பத்திரங்களை அச்சிட நேரிடும் சந்தர்ப்பங்களிற்காக கட்டுப்பாட்டு முறையொன்றை செயற்படுத்துதல் மற்றும் அதன் பிரகாரம் அந்த அவசர தேவைப்பாட்டிற்காக குறித்த விண்ணப்பதாரரின் எழுத்துமூல கோரிக்கை நியாயமானது என கவனத்திற் கொண்டு அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரினால் வழங்கப்படும் அங்கீகாரத்தை ஆவணப்படுத்தி பேணிச் செல்ல வேண்டும்
(ஆ)	**சர்வதேச சாரதி அனுமதிப்பத்திரம் விநியோகித்தல்**		
(i)	2009 இன் 08 இலக்க மோடார் வாகன அதிகார (திருத்திய) சட்டத்தின் 34 பந்தி மூலம் பிரதான பிரகனத்தின் 132 பிரிவிற்கு மேற்கொண்டுள்ள திருத்தமான 132 (அ)II பிரகாரம் சர்வதேச சாரதி அனுமதிப்பத்திரம் ஒன்றை விநியோகிக்க முன்னர் ஆணையாளர் நாயகத்தினால் தற்பணிக்காக நியமிக்கப்படும் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரினால் சர்வதேச சாரதி அனுமதிப் பத்திரத்திற்காக விண்ணப்பிக்கும் அனைத்து நபர்களையும் பரீட்சிக்க வேண்டுமென குறிப்பிட்டுள்ள போதும், சாரதி கடமைக்காக அத்தியவசியமான விண்ணப்பதாரரின் சுகாதார உடல் உருப்புக்கள் உரியவாறு	2009 இன் 8 இலக்க மோடார் வாகன அதிகார (திருத்திய) சட்டத்தின் பிரகாரம் இலங்கையில் சர்வதேச சாரதி அனுமதிப்பத்திரம் விநியோகிக்கும் அதிகாரம் காணப்படுவதானது இலங்கை ஒடோமொபயில் சங்கத்திற்காகும். முன் அச்சிட்ட இலக்கம் கொண்ட சர்வதேச சாரதி அனுமதிப்பத்திர படிவம் விநியோகிக்கப்படுவது நாரஹேன்பிட தலைமை அலுவலகத்திலாகும். முறையாக மற்றும் உரியவாறு மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தினால்	ஆணையாளர் நாயகத்தினால் தற்பணிக்காக நியமிக்கப்படும் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரினால் சர்வதேச சாரதி அனுமதிப் பத்திரத்திற்காக விண்ணப்பிக்கும் அனைத்து நபர்களையும் பரீட்சிக்கும் முறைமை ஒன்றை தயாரிக்க வேண்டும்.

	செயற்படுகின்றனவா என்றாவது பரீட்சிக்காமல் விண்ணப்பதாரர் இல்லாமலே குறித்த சங்கத்தினால் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களிற்காக சர்வதேச சாரதி அனுமதிப் பத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்தது.	விநியோகிக்கப்பட்டுள்ள எதிர்காலத்திற்கு 1 ஆண்டைவிட அதிக காலம் செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரமொன்று காணப்படும் நபர்களிற்காக சர்வதேச சாரதி அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்படும்.	
(ii)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 2301/17 மற்றும் 2022/10/10 திகதிய அதிவிசேட வர்த்தமானி மூலம் மோடார் வாகன அதிகார சட்டத்தின் 203 அத்தியாயத்திற்கான கட்டளை பிரகாரம் சர்வதேச சாரதி அனுமதிப்பத்திரம் ஒன்றை விநியோகிக்கும் சாதாரண சேவைக் கட்டணம் ரூபா 3,000 தொகை மற்றும் ஒரு நாள் சேவைக் கட்டணம் ரூபா 3,500 தொகையும் ஆவதுடன், அக் கட்டணம் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தினால் அறவிடப்பட வேண்டும். எனினும் அந்த கட்டளைக்கு மாற்றமாக சர்வதேச சாரதி அனுமதிப்பத்திரம் ஒன்றிற்காக ரூபா 10,394 தொகை குறித்த சங்கத்தினால் அறவிடப்பட்டிருந்தது. இது தனியார் நிறுவனமொன்று ஆகையால், அவர்கள் அறவிடும் ஏனைய கட்டணங்கள் தொடர்பாக மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகம் கடப்பாட்டிற்கு உட்படுவதில்லை என கணக்காய்விற்கு அறிவுருத்தப்பட்டது.	சர்வதேச சாரதி அனுமதிப்பத்திரம் ஒன்றை விநியோகிப்பது தொடர்பாக சாதாரண சேவையின் கீழ் ரூபா 3,000 யும் ஒரு நாள் சேவையின் கீழ் ரூபா 3,500 வும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 2301/17 மற்றும் 2022/10/10 திகதிய அதிவிசேட வர்த்தமானி பிரகாரம் அறவிடப்படுகின்றது. ஒவ்வொரு நாட்களிலும் கையொப்பமிடப்படும் விண்ணப்ப எண்ணிக்கைகுரியதாக செலுத்தப்படும் கொடுப்பனவு காசோலை மூலம் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திற்கு நாளாந்தம் இலங்கை ஒடோமொபயில் சங்கத்தினால் வழங்கப்படும். அதன் பிரகாரம் அரசிற்கு அறவிட வேண்டிய கட்டணத்தை சட்ட ரீதியாக அறவிடப்பட்டுள்ளது.	அரசினால் அங்கீகரித்த கட்டணங்களை தவிர்ந்த கட்டண அறவீட்டை தவிர்க்கவும், சட்ட ரீதியான அதிகாரமற்ற நிறுவனமொன்று பொது மக்கள் நிதியை அறவிடுவதனை தவிர்க்கவும் தேவையான செயற்பாடுகளை எடுக்க வேண்டும்.
(iii)	மோடார் வாகன அதிகார சட்டத்தின் 132(ஆ) பிரிவு பிரகாரம் வியானா மாநாட்டின் ஒப்பந்த அரசுகளினால் விநியோகிக்கப்பட்ட செல்லுபடியாகும் சர்வதேச சாரதி அனுமதிப்பத்திர சட்டத்தின் ஏற்பாட்டின் கீழ் விநியோகிக்கப்பட்ட சாரதி அனுமதிப்பத்திரம் ஒன்றாக கருத வேண்டும். சர்வதேச சாரதி அனுமதிப்பத்திரம் ஒன்றினைக் கொண்டுள்ளவரிற்கு மோடார் வாகன அதிகார சட்டத்தின் பிரகாரம் எந்தவித தடையும் இன்றி இலங்கையில் அனுமதிப்பத்திரதார	Recognition permits நிவியோகிப்பதற்காக மோடார் வாகன அதிகார சட்டத்தில் அல்லது வேறு ஏதேனும் வகையிலான சட்டரீதியான ஏற்பாடுகள் இல்லை. இது தொடர்பாக இரண்டு சந்தர்ப்பங்களில் இலங்கை ஒடோமோபைல் சங்கம் அறிவுருத்தப்பட்டுள்ளது.	சட்டவிரோத சாரதி அனுமதிப்பத்திர விநியோகத்தை தவிர்க்கவும், சட்டத்தின் அதிகாரத்தை துஸ்பிரயோகம் செய்த நபர்களிற்கு எதிராக சட்ட செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வகுப்பிற்குரிய மோடார் வாகனங்களை செலுத்த முடியும். எனினும் குறித்த சங்கம் எவ்வித சடடரீதியான அடிப்படையோ அதிகாரமோ இன்றி இலங்கைக்கு வருகைதரும் சர்வதேச சாரதி அனுமதிப்பத்திரம் உடைய வெளிநாட்டவர்களிடம் ரூபா 8,466 தொகையை அறவிட்டு Recognition permit எனும் பெயரில் சட்டவிரோத சாரதி அனுமதிப்பத்திரம் ஒன்றை விநியோகிக்க நடவடிக்கை எடுத்திருந்தது. Recognition permit விநியோகிப்பதற்காக மோடார் வாகன அதிகார சட்டத்தில் அல்லது வேறு ஏதேனும் வகையிலான சட்டரீதியான ஏற்பாடும் இல்லையென இரண்டு சந்தர்ப்பங்களில் குறித்த சங்கத்தை அறிவுருத்தியுள்ளதாக மோடார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் கணக்காய்விற்கு அறிவுருத்தியுள்ளார்.

(இ) சாரதி அனுமதிப்பத்திரம் அச்சிடுவதற்காக எழுத்துமூல பரீட்சை நடாத்துதல்

(i) மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் வேரஹெர அலுவலகத்தின் மூலம் சாரதி அனுமதிப்பத்திரம் விநியோகிப்பதற்கான எழுத்துமூல பரீட்சையொன்றை முன்கூட்டிய தின ஒதுக்கலின் கீழ் கணனி பயன்பாட்டுடன் ஒரு நாளைக்கு 03 சந்தர்ப்பங்களில் நடாத்தப்படுவதுடன் அதற்காக 143 கணனி இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. அதன் பிரகாரம் ஒரு சந்தர்ப்பத்தில் இயந்திர கோளாறுகளிற்கு சந்தர்ப்பம் வழங்கி 135 இற்கும் 140 எண்ணிக்கைக்கு இடையிலான விண்ணப்பதாரர்களிற்கு பரீட்சைக்கு தோற்ற சந்தர்ப்பம் வழங்க முடியுமான போதும், ஒரு சந்தர்ப்பத்தில் பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியுமான விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கையை 110 இற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. எனினும் பரீட்சை நடாத்தும் தினத்தில் அல்லது அதற்கு முன்னைய

சாரதி அனுமதிப்பத்திரம் எழுத்துமூல பரீட்சைக்காக ஒரு நாளில் ஒரு பரீட்சை தடவைக்கு 143 விண்ணப்பதாரர்களிற்கு தோற்றும் சந்தர்ப்பம் உள்ளதுடன சில நாட்களில் கணனி செயலிழப்பதன் காரணமாக அந்த அளவு மிகவும் சிறிய அளவால் மாற்றமடைய முடியும். 2022.10.10 திகதிய இலக்கம் 2301/17 கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் சாரதி அனுமதிப்பத்திரங்களிற்கான திருத்திய கட்டண அட்டவணையின் பிரகாரம் மற்றும் 2024.11.26 திகதிய இலக்கம 08/2024 கொண்ட இத் திணைக்களத்தின் உள்ளக சுற்றறிக்கை பிரகாரம் சாரதி அனுமதிப்பத்திரம் ஒன்றை பெற்றுக் கொள்வதற்காக பதிவு செய்யும் விண்ணப்பதாரரிற்கு எழுத்துமூல பரீட்சைக்காக

உத்தியோகத்தர்களிற்கு தமது விருப்பம் பிரகாரம் நபர்களிற்கு விசேட சந்தர்ப்பம் வழங்க முடியுமானவாறு இஸ்தாபிக்கப்பட்டுள்ள தொகுதி பலவீனங்களை விரைவில் சரிசெய்து மனித உரிமையை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	தினத்தில் விசேட கடவுக் குறியீடுடைய உத்தியோகத்தரினால் எஞ்சிய ஆசனங்களிற்கு (கணனி) முறையின்றி விண்ணப்பதாரர்கள் அனுப்பப்பட்டிருந்தனர்.	ரூபா 1,000 தொகையான மேலதிக கட்டணத்தை செலுத்தி அத்திகதியிலேயே எழுத்துமூல பரீட்சைக்காக தோற்ற சந்தர்ப்பம் விழங்கப்பட்டுள்ளது.	
(ii)	சாரதி அனுமதிப்பத்திரம் விநியோகிப்பதற்கான எழுத்துமூல பரீட்சைக்கு எந்தவொரு தினத்திலும் விண்ணப்பதாரர்களை அனுப்ப முடிமாவதை போலவே தடுத்து வைத்துள்ள ஆசனங்களிற்காக விண்ணப்பதாரர்களை அனுப்ப முடியுமானவாறு வேரஹெர அலுவலகத்தின் 15 உத்தியோகத்தர்களிற்கு விசேட கடவுக் குறியீடு வழங்கப்பட்டுள்ளதுடன், பதவிநிலை அல்லாத 11 உத்தியோகத்தர்களும் அதற்கு உற்சென்றிருந்தனர்.	இந்த அலுவலகத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களிற்கு இடையே விசேட கடவுக் குறியீடு வழங்கப்பட்டுள்ளது பின்வரும் உத்தியோகத்தர்களிற்கு மாத்திரமாகும். அதாவது 1.ஆணையாளர் /பிரதி ஆணையாளர் /உதவி ஆணையாளர். 2. கடமை தேவைப்பாட்டின் பிரகாரம் ஒவ்வொறு பிரிவுகளிலும் பொறுப் வாய்ந்த உத்தியோகத்தர்கள் அதன் பிரகாரம் எழுத்துமூல பரீட்சைக்காக தின வழங்கல் செய்யப்படுவது பணம் அறவிடும் கருமபீடங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் மாத்திரமாகும்.	விசேட கடவுக் குறியீட்டை அகற்றி மேற்குறித்த (i) இன் பிரகாரம் தொகுதியை அபிவிருத்தி செய்தல்.
(ஈ)	**பதிவிலக்கம் KE - XXXX கொண்ட மோட்டார் வண்டிக்குரிய மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்கள கணனித் தொகுதில் உள்ளடங்கியுள்ள தகவல்களை மாற்றுதல்**		
	மேற்குறித்த பதிவிலகத்தை உடைய AT-212-0066488 செஸி இலக்கம் கொண்ட மோடார் வண்டியை 2007 ஆகஸ்ட் 15 திகதி மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் இலக்கம் LOT S 0034392 கொண்ட பதிவுச் சான்றிதழின் கீழ் சனாதிபதி செயலாளர், சனாதிபதி செயலகம், கொழும்பு 01 எனும் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்தது. அதன் பதிவிலக்கத்தின் கீழ் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்கள தரவுத் தொகுதியில்	மேற்குறித்த விடயம் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு ஐயவினாவிற்கு 2025.03.19 திகதி வழங்கப்பட்ட பதிலில் குறிப்பிடுவதன் பிரகாரம் இது தொடர்பாக விரைவில் புலனாய்வொன்றை மேற்கொண்டு அறிக்கையொன்றை விநியோகிப்பதற்காக 2025.05.08 திகதி என்னால் குழுவொன்று நியமிக்கப்பட்டது. அந்த புலனாய்வுக் குழு அறிக்கை 2025.06.08 திகதிக்கு முன்னர்	இந்த தரவு மாற்றத்தை செய்துள்ள கடவுக் குறியீட்டையுடைய உத்தியோகத்தரை இனங்கண்டு விரைவில் உள்ளக விசாரணை ஒன்றை மேற்கொண்டு தாபன விதிக்கோவை பிரகாரம் ஒழுக்காற்று செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க

உள்ளங்கியிருந்த வாகனத்தின் உரிமையாளரின் பெயர், உரிமையாளரின் முகவரி, செஸி இலக்கம், இயந்திர இலக்கம் உள்ளிட்ட முக்கிய பதிவுத் தரவுகள் மோசடியாக மாற்றி, அற்குப் பதிலாக LOT S 0034392 கொண்ட அந்த பதிவுச் சான்றிதழின் கீழே காலி பிரதேசத்தின் நபர் ஒருவரின் தகவல் மோட்டார் வாகன போக்குவரத்து தரவுத் தொகுதியில் உள்ளடக்கி, சனாதிபதி செயலகத்திற்கு உரிய மேற்குறித்த வாகனத்தின் தகவல்கள் தரவுத் தொகுதியில் மோசடியாக அழிக்கப்பட்டிருந்தது.

வழங்க நடவடிக்கை வேண்டும். எடுக்குமாறு

அறிவிக்கப்பட்டுள்ளது.

புலனாய்வு அறிக்கை கிடைத்த பின்னர் மேற்குறித்த இலக்க வாகனம் தொடர்பாக முன்நடவடிக்கை எடுப்பதென மேலும் அறிவிக்கிறேன்.